# சித்த வைத்தியம் சித்தர்களால் கண்டுபிடிக்கப்பட்டது

**முனைவர் செ.சங்கீதா**
**உதவிப்பேராசிரியர்**
**மாணிக்கம் இராமசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி**
**மதுரை.**

**39**

**ஆய்வுச்சுருக்கம்:**

சித்தா என்பது தென்னிந்தியாவில் முக்கியமாக தமிழ்நாட்டில் உருவான ஒரு பண்டைய இந்திய பாரம்பரிய சிகிச்சை முறையாகும். இந்த மருத்துவ முறையின் தோற்றம் தெய்வீகமாகக் கருதப்பட்டாலும், சித்தர் அகஸ்தியர் இந்த மருத்துவ முறையின் முறைக்கு முக்கிய பங்களிப்பாளர்களாக 18 சித்தர்கள் உள்ளனர் என்பதையும் இக்கட்டுரையின் மூலம் அறியலாம்.

**ஆய்வு நோக்கம்:**

சித்த மருத்துவத்திற்கான மூல நூல்கள் மற்றும் ஆய்வு கட்டுரைகள் தமிழ் மொழியில் எழுதப்பட்டுள்ளன.

**திறவுச்சொற்கள்:** கலக்கல்பம், மரக்கல்பம், சைன காளி கல்வம், செந்தூரம் பஸ்பம் பாஷானம் ,பஸ்பம்,குஷ்பம் ரசக்கட்டு

**முன்னுரை :**

சித் என்றால் அறிவு, ஞானம் தெள்ளிய பார்வை கூர்நோக்கு விரிந்த நோக்கம் என்று பொருள்படுவதால் சித்தர்களை அறிவாளிகள் ஞானிகள் தெளிந்த பார்வை உடையவர்கள், கூர்நோக்கிகள், கடந்து சிந்திப்பவர்கள் எனக் கொள்ளலாம் .

மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற நான்கில் அகங்காரம் உருவெடுக்கும் முன்பாகவே விரிந்த மனத்தை சித்தத்திலேயே தெளிய வைத்த சித்தம் தெளிந்தவர்கள் சித்தர்கள்

உடலை யோகாப் பயிற்சி மற்றும் பிராணயாமம்ப் பயிற்சிகளின் மூலம் நோயற்றதாக வைத்துக் கொள்ளவும் இவற்றினால் முடியாமல் வரும் நோய்களைக் களைவதற்கு மருந்துகளையும் கண்டறிந்தனர் இந்தச் சித்தர்கள் மக்கள் நல்லனுக்காகவே உழைத்தவர்கள்.

நம் நாட்டுச் சித்தர்கள் மனிதகுல மேம்பாட்டுக்காக மட்டுமே உழைத்தவர்கள் மேலும் சித்தர்கள் சிந்து விளையாடியவர்கள் என்றே பெரும்பாலான மக்களுக்குத் தெரியும். ஆம் மனிதனுக்கு அப்பாற்பட்டவை என்று சொல்லப்படும் அணி மாதி சித்துக்குள் கைவரப்பட்டவர்கள் தான் சித்தர்கள்.

**சித்தர்களின் சமுதாயப் பணி**:

சித்தர்கள் கலியுகத்தின் ஆரம்பத்தில் வாழ்ந்தவர்கள் என்பதால் கலியின் பிடியில் மக்கள் அதிக நோய்களுக்கு ஆளாக நேரிடும் என்பதைத் தங்கள் தீர்க்க தரிசனத்தால் உணர்ந்து தங்களது அதிகப்படியான உழைப்பை மருந்துகள் தயாரிப்பதிலேயே செலவழித்தனர். தங்களது பெரும் பகுதி நேரத்தை மூலிகைகளை பறித்தும், சேர்த்தும் மருந்துகள் தயாரித்தும் கழித்தனர்.

சோதனைச் சாலைகள், அதற்குரிய கண்ணாடி குவளைகள் இல்லாத காலத்திலும்,கல்கல்வம், மரக்கல்வம், சைன காளி கல்வம் போன்றவற்றைப் பாத்திரமாக்கிச் சோதனைகளை மேற்கொண்டார்கள். இது போன்ற கல் பாத்திரங்களை இன்றும் காணலாம். உதாரணம் கோரக்கர் குண்டா, சதுரகிரி.

**சித்த வைத்தியம்:**

சித்தர்களால் கண்டுபிடிக்கப்பட்டது தான் சித்த வைத்தியம் இம்முறையில் மூலிகைகள் ரசம், ரசாயனம், செந்தூரம், பஸ்பம் ,கல்பம் ,பாஷானம், கட்டு போன்ற மருந்துகள் காணப்படுகின்றன. தற்சமயம் புழக்கத்தில் இருக்கும் அல்லோபதி என்ற ஆங்கில மருத்துவத்தில் குணமாகாத நோய்களும் உள்ளன உதாரணம். கேன்ஸர், எய்ட்ஸ்,குஸ்குலர் டிஸ்ட்ரோஃபி, சர்க்கரை வியாதி, குஷ்பம் மேலும் ஆங்கில மருத்துவத்தின் மருந்துகள் விரைவில் குணமளிப் பவையாகவும் தொடர்ச்சியாக ஒரு வியாதிக்கு மருந்து சாப்பிடும் போது அதே மருந்து பக்க விளைவுகள் உண்டு பண்ணி மற்றொரு பாகத்தைப் பாதிப்பவையாகவும் உள்ளன. உதாரணம் நீரழிவு நோய்களுக்குத் தொடர்ச்சியாக மருந்து உண்டால் இருதய சம்பந்தப்பட்ட நோய்களைத் தோற்றுவிக்கிறது.

**சித்தர்கள் பற்றிய தகவல்கள்:**

சித்தர்கள் தங்கள் அனுபவ அரிவால் மருத்துவத்தை நன்குணர்ந்து மிகவும் துல்லியமாகக் கூறியுள்ளனர்.முக்கியமாக தமிழ்நாட்டைச் சேர்ந்த சித்தர்கள் சித்த மருத்துவ முறைக்கு அடித்தளமிட்டனர்.

18 சித்தர்களில் சிலர் நந்தி அகஸ்தியர் அகப்பை, பூம்பாட்டி முதலியவர்கள். சன்மார்க்கச் சித்தர்கள் - திருமூலர் போகர் ஞானச் சித்தர்கள் - பட்டினத்தார், பத்திரகிரியார். சிவவாக்கியர் பாம்பாட்டிச் சித்தர், பேய்ச்சித்தர், குதம்பைச் சித்தர், அழுகண்ணர், இடைக்காட்டுச் சித்தர், காய சித்தர்கள் - கோரக்கர் ,கருவூர்ச் சித்தர் ,மச்சமுனி, சட்ட முனி, சுந்தரானந்தர், உரோமுனி

**ஆயுர்வேத வைத்தியம்:**

ஆயுர்வேத வைத்திய முறை சித்த வைத்தியத்துக்கும் முற்பட்ட காலத்ததாக இருந்தாலும் சித்த வைத்தியத்துக்கும் இணையான பலனைத் தருவதில்லை என்று ஒத்துக்

கொள்ளப்பட்டுள்ளது. ரிக் வேதத்தில் புல், பூண்டு ,செடிகளால், வேர்களால், மற்றும் நீரால் செய்யப்படும் வைத்தியம் சொல்லப்பட்டுள்ளது. ஆயுர்வேத முறையில் நோயாளியிடம் விசாரித்தல் ,தொடுதல், பார்த்தல் போன்ற முறைகளால் நோய் இன்னதென்று அறியப்படுகிறது.

**சித்த வைத்தியத்தின் சிறப்புபியல்புகள்:**

சித்த வைத்திய முறையில் நோயாளியின் கையில் நாடிப்பிடித்துப் பார்க்கப்பட்டு வாத, பித்த, சிலேத்தும் என்ற முத்தோஷங்களில் எது அதிகம் உள்ளதோ அதன்படி மருத்துவம் பார்க்கப்படுகிறது. மூலிகைப் பொடிகள், இலைகள் ரசம், ரசாயனம், போன்றவை நோய்களின் தன்மைக்கு ஏற்ப கொடுக்கப்படுகின்றன. ஆயுர்வேதத்தில் இருந்து சித்த வைத்தியம் எப்படிச் சிறந்தது எனின் பாஷாண ஔஷதம், ரசக்கட்டு போன்ற மருத்துவத்தில் ஆகும்.பாஷாணம் என்றால் விஷம் விஷத்துக்கு விஷம் தான் முறிவு என்ற தத்துவத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது. பாம்பு கொத்தியவருக்குப் பாம்பிலிருந்து எடுக்கப்பட்ட விஷம் தான் முறிவாகச் செலுத்தப்படுகிறது. ஆயுர்வேத வைத்தியத்தில் முதுமையைத் தள்ளிப் போடவோ இளமையைக் காத்துக் கொள்ளவோ, மரணத்தைத் தடுக்கவும் முடியாது எனச் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் சித்தர்கள் கர்ம வியாதிகளைத் தீர்க்க முடியும் இளமை காத்து முதுமையைத் தள்ளிப்போட்டு மரணத்தையும் வென்று இப்பூவுலகில் விரும்பிய காலம் வரை வாழ முடியும் என்றும். "விரும்புங்கால் சமாதிகிட்டும் என்றும் சொல்லியுள்ளார்கள் இதன் பொருள் நினைத்தால் சாகலாம்" என்பதாகும் .அதாவது இச்சை மரணம் உதாரணம் கங்கை மைந்தர் பீஷ்மர்.

பாஷாண ஔஷதங்களின் மூலம் எந்த நோயையும் குணப்படுத்தி விட முடியும் என்பதே சித்தர்கள் நமக்குச் சொல்லியிருப்பதாகும். சித்தர் பாடல்களில் "எமன் என்ற காலனை எட்டிக் காலால் உதைத்து விட முடியும்" எனவும் சொல்லப்பட்டுள்ளது. மனிதர்களை உண்ணும் மரணத்தையும் உண்டு விட முடியும் எனவும் சொல்லப்பட்டுள்ளது.

"மரணமிலாப் பெருவாழ்வு" என்ற நிலையும், சாகாக் கலை இல்வாழ்க்கை, மீண்டும் பிறவாக்கலை என்ற நிலைகளும் சித்தர்கள் உலகில் சாத்தியம் என்பது சித்தர்கள் வாழ்ந்த ஆயுட்காலத்தைப் பார்த்தாலே புரிந்து கொள்ளலாம். உதாரணம் திருமூலர் மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்துள்ளார். ஆயுர்வேத விற்பன்ன நிபுணர்களான சீர்காழி வைத்தியர் சி எஸ் நாராயணசாமி அய்யர் பண்டிட் டி கோபாலாச்சார்லு லட்சுமிபதி போன்றவர்களே இந்திய மருந்து ஆராய்ச்சிக் கழகத்தில் சாட்சியும் சொல்லி ஒத்துக்கொண்டும் உள்ளார்கள்.

சித்த வைத்தியத்திற்கு மேலும் மெருகூட்டுகிறது கல்பப் பொடிகள், வேம்பு கல்பம், நிலாவரைக் கலம்பகம், கொட்டைக் கரந்தைக் கற்பம் போன்ற கல்பப் பொடிகள் ஆயுளை நீட்டித்து உடம்பின் எதிர்ப்புத் தன்மையைக் கூட்டி ரத்தத்தின் தூய்மையை அதிகரிக்கிறது.

**ரச சித்தர்கள்;**

மருத்துவத்துறையைச் சேர்ந்தவர்கள், ஔஷதச் சித்தர்கள் என்றும் இவர்கள் அழைக்கப்படுகிறார்கள் .இவர்கள் மூலிகைகள் பஷாணம் முதலியவற்றால் நோய்களை ஆற்றுப்படுத்துபவர்கள்.

**காய சித்தர்கள்**:

காயம் என்ற உடம்பை கர்ப்ப மருந்துகள் மூலிகைகள், பாஷாணங்கள் போன்றவைகளைப் பயன்படுத்தி இறுக்கி முக்தியை அடைந்தவர்கள் காய சித்தர்கள்.

உதாரணம்:. போகர், கோரக்கர்

**முடிவுரை :**

இந்தச் சித்தர்கள் மனித சமுதாயத்துக்குச் செய்து இருக்கும் தொண்டுகள் அளவிடற்கு அரியது. மருத்துவம், யோகம், கல்பம் என்று பல துறைகளிலும் மனித சமுதாயம் இன்புற்று வாழ்வதற்காகவே தங்களை மலைகள் மற்றும் காடுகளில் ஐக்கியம் செய்து கொண்டு காடுகளில் கிடைத்த மூலிகைகளைப் பயன்படுத்தி மனித சமுதாயத்தின் நோய்களைப் போக்குவதற்குச் சித்த மருந்துகளைக் கண்டறிந்து வைத்தனர். மூலிகைகளில் இருந்து பொடி, ரசம், கல்பம் போன்றவற்றை பிரித்து எடுத்து மருந்துகளாகப் பயன்படுத்தினார்.

**அடிக்குறிப்பு :**

1.சித்தர் களஞ்சியம் - யோகி கைலாஷ்நாத்

2.சித்தர்களின் சாகசங்களை - சுவாமி அகமுகநாதர்

3.சித்தர்கள் வழிகாட்டும் வாசியோகம் - பாட்டுச்சித்தர் ஓம் சக்தி நாராயணசாமி சீர்காழி

**துணை நூல் பட்டியல்:**

1.சித்தர் களஞ்சியம் - யோகி கைலாஷ்நாத்

2.சித்தர்களின் சாகசங்களை - சுவாமி அகமுகநாதர்

3.சித்தர்கள் வழிகாட்டும் வாசியோகம் - பாட்டுச்சித்தர் ஓம் சக்தி நாராயணசாமி சீர்காழி